**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 24–ஆம், நாள் செவ்வாய்க்கிழமை**

**இ.ம.எண்.13/2026**
**இன்**
**அசல் வழக்கு எண்.108/2017**

1. திருமூர்த்தி (இறந்துவிட்டார்)
2. மூர்த்தி (எ) திருமூர்த்தி (இறந்துவிட்டார்)
3. ஆறுமுகம் (இறந்துவிட்டார்)
4. துளசிமணி
5. மனோன்மணி
6. சிவராஜ்குமார்
7. கண்ணம்மாள்
8. தர்மராஜ்
9. மகேஸ்குமார்
10. ஜானகி
11. தமிழரசி

...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சாந்தலிங்கம்
2. லட்சுமி
3. நாராயணசாமி
4. கோவிந்தம்மாள்
5. உதயகுமார்
6. செந்தில்குமார்
7. ராமதாஸ்
8. இந்திராணி

9. ரமேஷ் சிவக்குமார்
10. கந்தசாமி

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 13.03.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.வி.மூர்த்தி, B.A.,B.L., மற்றும் திருமதி.கே.ஹேமலதா, B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.எம்.அருணாச்சலம், B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகளை தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

i) இம்மனுவானது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிலுரையை அசல் வழக்கில் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை மன்னித்து ஏற்கவேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 9 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

மேற்படி வழக்கை பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் 1, 2, 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராகாமல் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் 1992ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டதாக கூறும் ஆவணம் குறித்து மூல ஆவணங்களை சரிபார்த்தபோது மேற்படி ஆவணம் உரிமையில்லாத நபரிடம்

ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பது தெரிய வந்துள்ளது. மேற்படி ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தவருக்கு ஆவணம் ஏற்படுத்த மூல உரிமை எதுவும் ஏற்படவில்லை. போலியான உரிமையில்லாத நபரிடம் 1992ம் வருடத்தில் ஏற்படுத்திய ஆவணத்தை கொண்டு 3, 4 எதிர்மனுதாரர்கள் பெயரில் 2008ம் வருடத்தில் ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் மனுதாரர்களின் உரிமையை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணத்தை மூல ஆவணமாக கொண்டு 5 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படுத்தியுள்ள ஆவணமும் மனுதாரர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தாது. மேற்படி 3, 4 எதிர்மனுதாரர்கள் 5 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு செக்குப்பந்தி கண்டு ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாலும் 1992ம் வருடத்தில் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்த கோவிந்தசாமி 1977ம் வருடத்திலேயே தனது உரிமையை 1 முதல் 3 வாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டதால் பின்னிட்டு ஏற்படுத்திய ஆவணங்கள் மனுதாரர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தாது என்பதால் மேற்படி விபரங்களை கூடுதலாக வழக்குரையில் குறிப்பிட வேண்டியுள்ளது. 6ம் மனுதாரரின் தகப்பனார் இறந்த பின்னிட்டு அவர் தற்போதுதான் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதால் மனுதாரர்கள் தரப்பு பதில் வழக்குரையை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே இந்த மனுவை அனுமதிக்க வேண்டுமென்பதே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கமாகும்.

<u>2. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 4 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

i) வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு பொய்யானது மற்றும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/வாதிகள் 1977ம் ஆண்டில்

கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் பொதுவாக உள்ளது என்றும், அதை பாகம் செய்து கொடுக்க வேண்டும் என்று சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள்/வாதிகளுக்கு வழக்குச் சொத்தான க.ச. 343/1 மற்றும் க.ச. 344/1 ஆகிய இரண்டு காலைகளில் 11.07.1977 ம் தேதியில் பொன்னுசாமி வகையறா கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். அது திருப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண். 1096/1977 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் அவர்கள் கிரையம் பெற்ற சொத்து விவரத்தின் படி பு.ஏ. 4.50 ல் இதில் பொதுவில் பு.ஏ. 3.00 உள்ள பூமியினை கிரையம் பெற்றுள்ளார்கள். அதில் 04.09.1984 ம் தேதியில் 1 ம் பிரதிவாதிக்கு பு.ஏ. 2.29 சொத்தினை விற்பனை செய்துவிட்டார்கள். வாதிகளுக்கு பாக்கியிருப்பது பு.ஏ. 0.71 சென்ட் மட்டுமே ஆகும். அவ்வாறு வாதிகளிடம் இருந்து கிரையம் பெற்ற 1 ம் பிரதிவாதி, 10 ம் பிரதிவாதிக்கு பு.ஏ. 1.50 சென்டினை விற்பனை செய்துள்ளார். தற்போது 1 ம் பிரதிவாதிக்கு 0.79 சென்ட் மட்டும் பூமி உள்ளது. மேற்கண்ட வகையில் வாதிகள் 11.07.1977 ம் தேதியில் க.ச. 343/1, 344/1 ஆகிய காலைகளில் கிரையம் பெற்ற பு.ஏ. 3.00 உள்ள பூமியை வாதிகள், 1 ம் பிரதிவாதி மற்றும் 10 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார்கள். 3 ம் பிரதிவாதியின் தந்தை பழனிசாமி மற்றும் முத்துசாமிக்கவுண்டர் மனைவி சரஸ்வதி ஆகியோர்கள் 15.09.1975 ம் தேதியில் க.ச. 343/3 ஏ–ல் பு.ஏ. 2.69 ம், க.ச. 343/3 சி நெ.காலையில் பு.ஏ. 2.65 ம் கிரையம் பெற்றுள்ளார்கள். கரைபுதூர் கிராமத்தில் க.ச. 343/3 ஏ நெ.பு.ஏ.2.69 க்கு தரம் ரூ. 2.18. பின்னும், க.ச. 343/3 சி நெ.காலை பு.ஏ. 2.65 க்கு தரம் ரூ.2.15 இது பூராவும் என்று தெளிவாக கண்டு எழுதப்பட்டுள்ளது.

ii) க.ச. 343/3, 344/3 நெ.காலைகளில் உள்ள சொத்து எந்த வகையிலும் வாதிகளுக்கு சம்பந்தப்பட்டது அல்ல. அதற்கும் வாதிகளுக்கும் எந்தவொரு

உரிமையோ பாத்தியமோ கிடையாது. வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியின் தந்தை பழனிசாமி மற்றும் சரஸ்வதி ஆகியோர்கள் 1975 மற்றும் 1977ம் ஆண்டில் கிரையம் பெற்ற சமயத்திலேயே உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வாதிகள் கிரையம் பெறுவதற்கு முன்பே செய்யப்பட்டிருக்கும் உட்பிரிவை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோருவதும், புகார் கூறுவதும் ஏற்புடையது அல்ல. 3, 4 பிரதிவாதிகள் 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கு செய்து கொடுத்திருக்கும் கிரையமும் சட்டப்படி செல்லாது என்று கூற வாதிகளுக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது. வாதிகள் 1977ம் ஆண்டில் க.ச. 343/1, 344/1 நெ.காலைகளில் மட்டுமே கிரையம் பெறுகிறார்கள். அவ்வாறு இருக்கும் போது க.ச. 343/3ஏ ல் 3, 4 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்திருப்பது ஏற்றுக் கொள்ள கூடியது அல்ல என்று கூற வாதிகளுக்கு எந்த அருகதையும் இல்லை. வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய முன்னோர்கள் ஏற்கனவே க.ச. 343/3ஏ நெ.காலையை பொறுத்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடத்தில் 3ம் வாதியின் தந்தை மற்றும் கோவிந்தசாமிக்கவுண்டருக்கு எதிராக பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள். மேற்படி வழக்கு 10.02.2010ம் தேதியில் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கின் பேரில் மேற்படி அப்புக்குட்டி வகையறா இதுவரையில் எந்தவொரு மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை. 3, 4ம் பிரதிவாதியின் குடும்பத்தாருக்கு இடைஞ்சலும் இடையூறும் செய்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் வாதிகள் சட்டவிரோதமாக 3 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

iii) 11.07.1977ம் தேதியில் கிரையம் பெற்ற 1ம் வாதி தென்வடல் கிராசாக செல்லும் இட்டேரிக்கும் மேற்கு என்று கிரையம் பெற்றுள்ளார். ஆனால் அவரது

மகனுக்கு 10.02.2009ம் தேதியில் செய்து கொடுத்திருக்கும் தான செட்டில்மென்ட் பத்திரத்தில் க.ச. 343/2 தென்வடல் கிராசாக செல்லும் ரோட்டுக்கும் கிழக்கு என்று கண்டு எழுதியுள்ளார். 11.07.1977ல் தென்வடல் ரோட்டுக்கும் மேல்புரம் இருந்து பூமி எவ்வாறு 10.02.2009ல் தென்வடல் ரோட்டுக்கும் கிழபுரம் மாறியுள்ளது என்று மோசடியாக 3, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை தான செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார். எனவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மேற்படி எண்ணில் உள்ள மனுவிற்கும் க.ச. 343/3ஏ மற்றும் 343/3சி ஆகிய காலைகளுக்கும் எந்தவிதமான உரிமையோ பாத்தியமோ இல்லை என்பதாலும் க.ச. 343/3ஏ மற்றும் 343/3சி ஆகிய காலைகள் 3ம் பிரதிவாதியின் தந்தைக்கு 15.09.1975 மற்றும் 14.09.1992ம் ஆண்டு செய்த கிரையம் மூலம் பெற்று அதனை அவர் உயிரோடு இருந்த காலம் வரையில் அவரே அனுபவித்து வந்து அவர் எழுதி வைத்த செட்டில்மென்டின் அடிப்படையில் 3, 4ம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப் பட்டுள்ளது என்பதாலும், 3, 4ம் பிரதிவாதிகளுக்கு பிரிந்துள்ள சொத்துக்களை அவர்கள் 5 முதல் 9 பிரதவாதிகளுக்கு விற்பனை செய்திருப்பதாலும் இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல, செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கமாகும்.

3) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக உத்தரவிடப்பட்டுள்ளார்கள்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :–**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**6. தீர்வு:–**

இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கின் ஆவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு எண்.108/2017 வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 9 ன் படி மனுவில் கண்டுள்ள பதிலுரையை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்கவேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இரு தரப்பு வாதுரைகள், வழக்கின் ஆவணங்கள் மற்றும் மனுவின் சங்கதிகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்ததில், 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையானது அவர்கள் ஏற்கனவே அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையினை அப்படியே எதிருரையாக தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு சொல்லப்பட்டுள்ள முக்கியமான சங்கதியானது 3ம் வாதியின் தகப்பனார் பெயரில் கடந்த 1992ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும் ஆவணம் உரிமையில்லாத நபர்களிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் 3, 4 எதிர்மனுதாரர்கள் பெயரில் 2008ம் வருடத்தில் ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் மனுதாரர்களின் உரிமையை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது. 1992ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தில் கொண்டுள்ள சொத்துக்களை கோவிந்தசாமி

கடந்த 1977ம் வருடத்திலேயே 1 முதல் 3 வாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டதால் பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் மனுதாரர்களின் உரிமையை கட்டுப்படுத்தாது என்பது குறித்து கூடுதல் வாதுரைகளுக்காக பதிலுரை தாக்கல் செய்வது அவசியமென்று சொல்லப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிகள் கடந்த 1977ம் ஆண்டு க.ச.343/1, க.ச.344/1 ஆகிய காலைகளில் மட்டுமே கிரையம் பெற்றுள்ளார்கள். எனவே, க.ச.343/3ஏ மற்றும் க.ச.343/3சி காலைகளை பொறுத்து 3, 4 பிரதிவாதிகள் செய்துகொண்டுள்ள கிரைய ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொல்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை. 10.07.1977 தேதியில் கிரையம் பெற்ற 1ம் வாதி தென்வடல் கிராசாக செல்லும் இட்டேரிக்கும் மேற்கு என்று தான் கிரையம் பெற்றுள்ளார். ஆனால், கடந்த 10.02.2009 தேதியில் தனது மகன் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ள செட்ல்மெண்ட் ஆவணத்தில் க.ச.343/2 தென்வடல் கிராசாக செல்லும் ரோட்டிற்கும் கிழக்கு என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார். மனுதாரர்களுக்கும் க.ச.343/3ஏ மற்றும் க.ச.343/3சி ஆகிய காலைகளுக்கு எவ்விதமான உரிமையோ, பாத்தியமோ இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) வழக்கில் கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் பெயரில் கடந்த 1992ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் உரிமையில்லாமல் ஏற்படுத்தப்பட்டு மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் கடந்த 2008ம் ஆண்டில் 3, 4 எதிர்மனுதாரர்கள் பெயரிலும், மேற்படி மூல ஆவணங்களின் அடிப்படையில் 5 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படுத்தியுள்ள ஆவணமும் மனுதாரர்களின் உரிமையை எவ்விதத்திலும்

கட்டுப்படுத்தாது என்பதால் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டுமென்று மனுதாரர்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

10) 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் மனுவில் கண்டுள்ள சங்கதிகளுக்கு எதிராக எதிருரை தாக்கல் செய்யாமல் அவர்களது எதிர்வழக்குரையையே எதிருரையாக மாற்றி தாக்கல்செய்துள்ளார்கள். இருதரப்பிலும் சொல்லியுள்ள ஆவணங்களின் செல்லுதன்மை குறித்து சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்திய பின்னர் தான் முடிவுக்கு வரமுடியும். மனுதாரர்கள் தரப்பில் 3ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு பதிலுரை தாக்கல் செய்ய வேண்டும் என்று தான் மனுவின் சாராம்சமாகும். மேற்படி அசல் வழக்கானது தரப்பினர்களின் சாட்சிய விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு நிலுவையிலிருந்த சமயத்தில் தான் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2017 செப்டம்பர் மாதத்திலேயே 3ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையை தாக்கல் செய்திருந்தாலும், மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவினை கடந்த 18.02.2026 தேதியில் தான் தாக்கல் செய்துள்ளார்கள். இருப்பினும் அசல் வழக்கில் இன்னும் சாட்சியம் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர்களுக்கு போதிய வாதுரையுடன் அவர்களது வழக்கை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கும் பொறுட்டு, நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்கிறது. எனினும், வழக்கில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு மனுதாரர்கள் ஈடு செய்வது அவசியமென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவாக,**

இந்த மனு ரூ.3,000/- செலவுத்தொகையை 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 9 பிரதிவாதிகளுக்கு 29.03.2026 தேதிக்குள்

மனுதாரர்கள்/வாதிகள் செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை செலுத்த அழைக்க 30.03.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.24 18:10:03 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**<u>பிற்சேர்க்கை:–</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.24 18:10:10 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**